

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தி.மு.க. இளைஞரணி நடத்திய என் உயிரினும் மேலான என்ற பிரமாண்ட பேச்சுப் போட்டியில் பல கட்ட போட்டிகளில் பங்கேற்று தேர்வான மதுரை மண்டலத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு இறுதி போட்டியில் பங்கேற்பதற்கான சிறப்பு பயிற்சி முகாம் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா தலைமையில் நடைபெற்றதில் முன்னாள் எம்.பி. கம்பம் செல்வேந்திரன் பயிற்சியாளர்கள் டி.செங்குட்டுவன், புதுக்கோட்டை விஜயா, மருத்துவர் சஃபி சுலைமான், சூர்யா சேவியர், மில்டன் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்து பேசினார். உடன் இளைஞர் அணி அமைப்பாளர்கள் சௌந்தரராஜன், விமல், இளங்கோவன், கணேசன், ஹரிஹரன், செந்தில், கிருஷ்ணகுமார், ஆஜிப்கான் மற்றும் துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள் மாணவ – மாணவியர் பங்கேற்றனர்.

### சிவகங்கை மாவட்டத்தில்

# கழகத்தில் உறுப்பினராக அதிக அளவில் மகளிரைச் சேர்த்திடுவீர் !

## மாவட்டச் செயற்குழு கூட்டத்தில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

*சிவகங்கை, அக்.1.*

சிவகங்கை மாவட்ட கழக செயற்குழு கூட்டம் காரைக்குடியில் தலைவர் கலைஞர் பவளவிழா மாளிகையில் பசும்பொன் தா.கிருட்டிணன் அரங்கத்தில் மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ. கணேசன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் திருமதி தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கை மாறன் வரவேற்றுப் பேசினார்.



மாவட்ட செயலாளரும் கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர். பெரியகருப்பன் செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்டு பேசியதாவது:-

தலைமைக் கழகத்தின் சார்பில் சட்டமன்றத் தேர்தல் முன்னேற்பாடாக ஐந்து பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் மாவட்டம் தோறும் ஒவ்வொரு அணியாக அழைத்து அணியின் செயல்பாடுகள் குறித்து கேட்டு வருகிறார்கள். நமது கழகத்தில் 23 அணிகள் உள்ளது. இந்த அணிகளின் செயல்பாடுகளை தீவீரப்படுத்திடும் வகையில் ஒன்றிய நகர அளவில் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட உள்ளார்கள்.

இதில் மகளிர் அணி தொகுதிக்கு பத்தாயிரம் உறுப்பினர் சேர்ப்பதாக திட்டமிடப்பட்டுள்ளது. தலைவர் தளபதி அவர்கள் முதல்வராக பொறுப் பேற்ற காலத்தில் இருந்து கடந்த மூன்றரை ஆண்டுகளாக கழக ஆட்சியில் மகளிருக்காண எண்ணற்ற திட்டங்கள் நிறைவேற்றப். பட்டுள்ளது. இதன்மூலம் மகளிர்களுக்கு தனி அந்தஸ்து ஏற்படுத்தப் பட்டுள்ளது.

அவர்கள் வருவாய் ஈட்டி வருகிறார்கள். கழகத்தில் மகளீர் ஆர்வமாக சேர வருகிறார்கள். எனவே நமது மாவட்டத்தில் 4 தொகுதிக்கு 20,000 பேர் உறுப்பினர்கள் சேர்க்கப் பட வேண்டும். இதை மகளிர் அணி நிர்வாகிகள் வீடு வீடாகச் சென்று கழகத் தலைவர் முதல்வர் தளபதி அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி உறுப்பினர் களை சேர்க்க தீவிரமாக பணியாற்ற வேண்டும். ஒவ்வொரு அணியும் சிறப்பாக பணியாற்றுவதால் நம் கட்சி மேலும் பலத்துடன் செயல்படும். வருகின்ற 2026 தேர்தலில் தலைவர் தளபதி அவர்களின் விருப்பத்தின்படி 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும்.அதற்காக அனைவரும் ஒன்றுபட்டு ஒற்றுமையுடன் தேர்தல் பணியாற்றிய வேண்டும். அணிகளுக்கு ஒன்றிய நகர அளவில் அமைப்பாளர் கள் துணை அமைப்பாளர் கள் நியமிக்கப்பட உள் ளார்கள் இதன்மூலம் அனைத்து பகுதிகளிலும் கட்சி நீவீர் வளர்ச்சி அடையும். வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணியில் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர் கள் மாவட்ட நிர்வாகிகள் முகவர்கள் அனைவரும் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.


இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார்.

இந்த கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினரும் காரைக்குடி மாநகர மேயருமான எஸ்.முத்து துரை, பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, மற்றும் நகர் ஒன்றிய பேருர கழக செயலாளர் கள் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். காரைக்குடி மாநகர செயலாளரும் துணை மேயருமான என். குணசேகரன் நன்றி கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி.என். சுப்பிரமணியன்

**அக்டோபர் 1 (2015)**



**1956ஆம் ஆண்டில் கழக உறுப்பினராகி கழகப் பணியாற்ற துவங்கினார்.**

**25 ஆண்டுகள் தொடர்ந்து ஆற்காடு நகரச் செயலாளராகவும், 8 ஆண்டுகள் மாவட்டப் பொருளாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர். அத்தோடு, பத்து ஆண்டுகள் தலைமை தணிக்கைக் குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**1996ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# குரிசில் உதயா வாழ்க! வெல்க!



சங்கம்எங் கும்முழங் கிற்று
சாதனைகள் செய்வ தற்காய்
எங்கெங்கும் மக்கள் வாழ்த்து!
மன்பதை தொண்டு செய்வாய்!
திங்கள்போல் ஒளிமண் வீசித்
திசைகள் எங்கும் வாழ்க!
சிங்கம்போல் முழங்கும் ஆட்சி
துணைமுதல் வரானாய் வாழ்க!

இளைஞர்தம் ஊட்டச் சத்தே!
இயக்கத்தின் கையி ருப்பே!
களைப்புறாத் தேனீ சுற்றும்
கழகத்தின் சுறுசு றுப்பே!
தளையறு காளை யன்ன
தலைமுறை காக்கும் போத்தே!
விளைகதிர் அழகே! வீர
வரலாறு படைக்கின் றோனே!

வித்தைகள் பலவும் நாட்டும்
விஞ்ஞானப் படைப்பே! மங்காச்
சித்திரப் பொலிவே! சீர்கொள்
சிங்கார விளக்கே! சங்கே!
முத்திரை பதிக்கும் வானில்
முகிழ்த்தெழு கதிரே! ஓங்குக்
குத்துவாள் கூர்மை வெற்றி
கற்றிடத் தந்தோன் வாழி!

கலைஞரின் குலத்தே தோன்றல்
கழகச்சீர்ச் சிப்பாய்! ஞானக்
கலைபல கற்கும் வல்லோன்!
கவினுறு காட்சி தோய்ந்த
குலைகனி குலுங்கும் மாண்பே!
குற்றால அருவி போல்வாய்!
விலையேதும் கேளாத் தொண்டின்
விந்தையே வாழ்க நீடு!

படைநிமிர் அணிவ குப்பே!
புறப்பாட்டே! இளைஞர்க் கூட்டம்
நெடுந்தூக்கம் கெடுக்க வந்த
நீலவான் நிலவே! வல்லத்
தடைபல தகர்க்கும் சிங்கத்
தனிநடை ஏறே! கன்றே!
முடைநாற்றம் ஏற்காப் பாங்கின்
மகத்துவக் குரிசில் வாழ்க!

தளபதி படையில் நீஓர்
தனிப்பெரும் போர்வாள்! கூர்வேல்!
களத்திலோ அஞ்சாச் சிங்கம்!
கடமைகொள் முழவம்! என்றும்
உளத்திடைத் தைத்த கொள்கை
உணர்வினைப் போற்றும் தங்கம்!
வளமிகு பழமை! ஆழி
வாஞ்சைகொள் பவளம்! வாழ்க!

உகுத்திடு குப்பைக் கூளம்
உறுபிணி நீங்க நின்றே!
தொகுதியைச் சுற்றிச் சுற்றித்
தொண்டினில் வெல்வாய்! நீண்டப்
பகுதியை வட்டந் தன்னைப்
பணிசெயும் சிறந்த பாங்கில்
வகுப்பெடுப் பாய்நீ! மக்கள்
முகத்திடை முறுவல் காண்பாய்!

தேய்ந்திடாக் கழகத் திற்கே
தேர்தலில் வெற்றி காண
ஓய்ந்திடாத் தொண்டில் நின்றே
உன்னத சரிதம் செய்வாய்!
பாய்ந்திடும் புலிபோல் வீறு
பணிபல தொடக்கங் காண்பாய்!
சாய்ந்திடா இயக்கந் தாங்கத்
தக்கதோர் தூணும் ஆவாய்!

படத்தினில் நடித்த துண்டு!
பணியிலோ நடித்தா யில்லை!
குடத்திடை மழைபெய் நீராய்க்
குடற்பசித் தாகம் தீர்ப்போன்!
திடமிகு ஊக்க நெஞ்சால்
தனித்திறம் உதயா பெற்றான்!
படைத்திடு வெற்றி எங்கும்
புவனமே வாழ்த்த வாழ்க!

பிறப்பிலோர் கலைஞர் போத்தே!
பரிதியின் பிஞ்சே! வீரச்
சிறப்புறு இளைஞ! திங்கள்
சிந்தொளி மேனி கொண்ட
மறப்படை மறவ! அன்பு
மேவு மணிப்பூண் மார்ப!
திறம்பல ஏற்ற நம்மின்
தளபதி தோன்றல் வாழ்க!

திராவிட மாட லாட்சி!
திரும்பிய திசைகள் எங்கும்
பரவிடக் கருத்த ரங்கம்
பலமுனை பயில ரங்கம்!
விரவிடப் பாங்கு செய்தாய்!
வியப்பும்நீ! விந்தை நீயோ
முரசொலி! முழக்கம் ஓங்க
முன்னேற்றக் கழகம் வாழ்க!



**கவிஞர் தமிழ்தாசன்**
கழக தீர்மானக் குழுத் தலைவர்



கழக மாநில இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துணை முதல்வராக பதவி ஏற்றுக்கொண்டதையடுத்து தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்செல்வன் எம்.பி., வழிகாட்டலின்படி தேனி நகர செயலாளர் நாராயணபாண்டியன் ஏற்பாட்டில் தேனி பழைய பஸ் நிலையம் அருகில் இனிப்புகள் வழங்கி பட்டாசு வெடித்து கொண்டாடினர். உடன் அவைத்தலைவர் துரைராஜ்,மாவட்ட பிரதிநிதி பண்ணை ரவி, நெசவாளர் அணி மாவட்ட அமைப்பாளர் நாகமணி, தொழிலாளர் அணி மாவட்ட அமைப்பாளர் பூவே, டிசா குழு கமிட்டி உறுப்பினர் பவுன்ராஜ்,மற்றும் வார்டு செயலாளர்கள், நகர மன்ற உறுப்பினர்கள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.